RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பழந்தமிழர் வாழ்வியலில் குறிஞ்சி நிலப் பண்பாடு

**ம. கதிரவன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ். ஆர். எம் கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர் - 603203, இந்தியா

# The Cultural Traditions of the Kurinji Landscape in Ancient Tamil Life

**M. Kathiravan** [a, *]

[a] Department of Tamil, SRM Institute of Science and Technology, Chengalpattu, India

* Corresponding Author:
Kathiramsk1999@gmail.com

**ABSTRACT**

*Kurinji* is one of the five ecological landscapes (*thinai*) classified by the ancient Tamils and occupies a significant place in Sangam literary traditions. Characterized by mountains, forests, and hilly terrains, the Kurinji region represented a distinct geographical and cultural environment. Sangam literary sources reveal that the people inhabiting the Kurinji landscape exhibited social and cultural characteristics that differed considerably from those of other ecological regions. The inhabitants of the Kurinji region led largely self-sufficient lives, adapting to the challenges posed by their mountainous environment. Their way of life was shaped not only by economic self-reliance but also by deeply rooted cultural practices, customs, and traditions. From birth to death, the people of the Kurinji landscape followed distinctive cultural patterns and social practices that governed various stages of the human life cycle. Despite the difficulties associated with living in forests, mountains, and valleys, they successfully developed sustainable modes of existence suited to their natural surroundings. The Kurinji people established a unique cultural identity through their customs, beliefs, rituals, and social institutions. Many of these cultural practices have been preserved and transmitted across generations, reflecting the continuity and resilience of their traditional way of life. Their close relationship with nature profoundly influenced their worldview, social organization, and cultural expressions. This study aims to examine the cultural traditions and lifestyle practices of the Kurinji people as reflected in ancient Tamil literature. By analyzing the customs, values, and social practices associated with the Kurinji landscape, the article seeks to provide a deeper understanding of the cultural heritage and ecological consciousness of the ancient Tamils.

**Keywords:** Kurinji Landscape, Sangam Literature, Ancient Tamils, Cultural Traditions.

## முன்னுரை

குறிஞ்சி என்பது பண்டையத் தமிழகத்தில் பழந்தமிழர்களால் பகுத்து வைக்கப்பட்ட ஐந்து நிலத்திணைகளில் ஒன்றாகும். மலையும் மலை சார்ந்த இடமுமான வனங்கள் நிறைந்த பகுதியாக காட்சியளிக்கும். ஐந்து திணைகளில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் பிற நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களைக் காட்டிலும் மாறுபட்டு காணப்பட்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் தற்சார்பு முறையில் வாழ்ந்தது மட்டுமின்றி பண்பாடுப் பழக்க வழக்கங்கள் சார்ந்தும் வாழ்ந்து வந்துள்ளனர். குறிஞ்சி நில மக்கள் தங்கள் வாழ்வில் மேற்கொண்ட பண்பாடுகள் குறித்து ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## குறிஞ்சி நில வேளாண் தொழில்

குறிஞ்சி நிலத்து மக்களுக்கு மலையில் இயற்கையான பொருட்கள் மற்றும் வேட்டையாடிய பொருட்கள் குறைவாகப் பயனைத் தருவதால் மக்கள் கனி, காய், கீரைகளை உண்போராக மெல்ல

மெல்ல மாறினர். குறிஞ்சி நிலத்து பொதுமக்கள் கோரை, நெல், திணை, இவற்றை பயரிட நிலம் இல்லாத போது, மணம் கமழ் சந்தன மரங்களை வெட்டி நிலத்தை பக்குவ படுத்தி அதில் தோரை, நெல், வெண்சிறுகடுகு, இஞ்சி, மஞ்சள், மிளகு, அவரை என்று பல தானியங்களை பயரிட்டு வாழ்ந்தனர் என்பதை,

“குறுங் கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி

ஐவன வெண்ணெல்லொரிடல் கொள்பு நீடி

இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்”. - (மதுரைக்காஞ்சி 287 -289)

இப்பாடல் மூலம் நிலப் பாகுபாடு காலத்திலேயே குறிஞ்சி நில மக்கள் வேளாண்மை மேற்கொண்டனர் என்பது தெளிவாகிறது.

## குறிஞ்சி நிலத்துக் குடிமகள்

குறிஞ்சி நிலப்பொது மக்களாகிய குறவர்கள் தினைத்தாளால் வேயப்பட்ட சிறுகுடில்களிலும், புல்லால் வேயப்பட்ட குடில்களிலும், சரகால் வேய்ந்த குடில்களிலும் வாழ்ந்தனர். என்பதனை

“இருவி வேய்ந்த குறுகாற் குரம்பை” ( குறிஞ்சி பாட்டு - 153)

“புல்வேய் குரம்பைக் குடிதொறும்” ( புறம் -120 -13)

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகிறது. மலையில் வாழும் விலங்கினங்கள் உள்ளே நுழையாத அளவிற்கு கோழிக்கூடு போன்ற குடில்களில் வாழ்ந்தனர். தங்களிடம் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டே தங்கள் குடில்களை அமைத்துக் கொண்டதை அறிய முடிகிறது.

## குறிஞ்சி நில வளம்

மலை சார்ந்த குறிஞ்சி நிலமானது ஐவகை நிலங்களில் ஒன்று ஆகும். இந்நிலமானது இயற்கை வளமான மலை வளம், நீர் வளம் மிக்க பகுதி ஆகும். இங்குள்ள. மலையில் அதிகமான அறியவகை மரவகைகள் காணப்படுவதுடன் பல்வேறு மூலிகை வளங்கள் மற்றும் கனிம வளங்கள் நிறைந்திருக்கின்றன. இதனை,

பெரு மலைச் சிலம்பின் வேட்டம் போகிய, செறி மடை அம்பின், வல் வில், கானவன்

பொருது தொலை யானை வெண் கோடு கொண்டு, [அகநானூறு 282]

இதனை அகநானூற்று பாடல் வரிகள் குறிப்பிடுகிறது. மேலும், பெரிய மலைப் பகுதியில் வேட்டுவன் ஒருவன் நீர் விளங்கும் மலைச் சாரலின் போது பெரிய யானையைக் கொண்று அதன் தந்தம் கொண்டு பொன்னை தோண்டி வெட்டி எடுத்தான் என்பதை இப்பாடல் மூலம் அறிவதுடன் குறிஞ்சி நிலத்தின் வளத்தினை மையப்படுத்துகிறது.

## குறிஞ்சி நில மக்கள் உணவு பண்பாடு

மலைகளைத் தங்களது இருப்பிடமாகக் கொண்டு வாழக்கூடிய குறிஞ்சி சமூக மக்கள் உணவுத் தேவை என்பது பெரிதும், சிக்கலானதும் கூட. ஏனென்றால், சமதளப்பிரதேசத்தில் வாழக்கூடிய மக்களுக்கு ஏதாவது தேவையென்றால் சந்தை மூலம் அப்பொருள் கிடைத்துவிடும். ஆனால், மலைகளில் வாழும் மக்கள் தங்களின் உணவுத் தேவையை விலங்குகளை வேட்டையாடியும், சிறு அளவில் விவசாயம் மேற்கொண்டும் நிறைவு செய்து கொள்கின்றனர். குறிஞ்சி இனக்குழுச் சமூகத்தின் அடையாளமாகப் பகிர்ந்துண்டதனைக் கூறலாம். வேட்டையாடிய விலங்கைத் தாம் மட்டும் உண்ணாமல், தங்களது சுற்றத்தார்க்கெல்லாம் கொடுத்து உண்டு மகிழ்ந்த இனக்குழுச் சமூகத்தின் உச்சமாகக் கொண்டாடலாம். சங்க இலக்கியம் முழுவதும் இச்செய்தி பரந்துபட்டுக் காணமுடிகிறது. மலைச்சாரலில் கானவன் அம்பால் எய்து கொன்ற முள்ளம் பன்றிக் கறியை, அவனது கொடிச்சி, கிழங்கோடு அவர்கள் வாழும் சிறுகுடிக் குறவர் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்தனர் என்பதனைக்

"கானவன் எய்த முளவுமான்

கொழுங்குறை தேம் கமழ்

கதுப்பின் கொடிச்சி, கிளங்கொடு

காந்தன் அம் சிறுகுடிப் பகுக்கும்" (நற்.85)

நற்றிணைப்பாடல் வழி அறியமுடிகிறது.

## குறிஞ்சி நில மக்களின் ஆடை பண்பாடு

ஒரு மனிதனின் அடையாளத்தையும் உயர்வையும் தாங்கி நிற்பது ஆடையென்றால் மிகையில்லை. அவ்வகையில் பழந்தமிழர்கள் அவரவர் தகுதிக்கு ஏற்றார் போல அவரவர் நிலப்பகுதியில் கிடைக்க கூடிய பொருட்களை வைத்து ஆடை உருவாக்கி உடுத்திக் கொள்கின்றனர். அவ்வகையில் குறிஞ்சி நில தலைவி கூந்தலும் நுண்நூலாடையும், உடம்பின் பின்னம்முன்னும் பொருந்தியுள்ள தலைவியின் தோற்றம், இளமேகம் சூழ்ந்த மயில் போல்வதாயிற்றென்க. என்பதனை,

"நுண் நூல் ஆகம் பொருந்தினள், வெற்பின்

இள மழை சூழ்ந்த மட மயில் போல,

வண்டு வழிப் படர, தண் மலர் வேய்ந்து,"(அகம் -198)

இப்பாடல் குறிஞ்சி நிலத் தலைவி பருத்தியால் ஆன மெல்லிய நுண்ணிய நூலாடை அணிந்த தால் மயில் போலக் காட்சியளித்தால் என்பதை விளக்குகிறது.

## வழிபாட்டு மரபு

குறிஞ்சித் திணைவாழ் மக்களாகிய கானக்குறவர்கள் 'முருகு' எனும் மலைத்தெய்வத்தை வழிபட்டனர். இத்தெய்வத்தை "முருகனை சேய்யோன்" என தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இத்தெய்வம் மிகவும் கோபம் மிக்க பயத்தை உண்டாகக் கூடியவன் எனவும்; இத்தெய்வத்தின் கோபத்தை மழை பெய்யச் செய்தல் வழி சாந்தியடையச் செய்யலாம் எனக் குறவர்கள் நம்பினர். ஆதலால் குறவர்கள் தம் சுற்றத்தோடு மலைமேல்சென்று பலிக் கொடுத்து வழிபாடு செய் என்பதை,

"கானவன்

அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க எனக்

கடவுள் ஓங்கு வரை பேண்மார்" (நற்.165)

முருகன் கடவுள் மற்றும் சங்க கால கடவுள் மிகுந்த கோபத்துடன் இருந்தை நற்றிணைப் பாடல் வழி அறிய முடிகிறது. தெய்வத்திற்குப் படையல் படைத்ததை உண்டால் தெய்வக்குற்றம் வரும் என நம்பினர். ஊருக்குள் நுழையும் இடத்தில் இருக்கும் தண்ணீர்த் துறையில் வளர்ந்த பழையமரத்தில் கடவுள் தங்கும் என நம்பினர். இதனை,

எம் ஊர் வாயில் உண் துறைத் தடைஇய

கடவுள் முது மரத்து, உடன் உறை பழகிய,(நற்.83)

என்பதை நற்றிணைப் புலப்படுத்துகிறது.

## களவு நிலைப்பாடு

இந்நில மக்கள் களவு நிலையிலையை ஒழுக்க தன்மையுடன் பேணிக்காத்தனர். என்பதை,

"உண்ணு நீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்

தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்

கடைக் கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகை கூட்டம்செய்தான், அக் கள்வன் மகன்!" (கலி - 51)

இப்பாடலில் தலைவி சிறு குழந்தையாக இருக்கும் போது தலைவன் தலைவியை விளையாட்டுத் தனமாக சீண்டினான். தலைவி பருவகாலத்தில் தலைவன் தலைவியை காண இல்லம் தேடி வந்து உண்ணும் நீர் கேக்க தலைவியின் தாய் அழகிய பொன்னால் செய்யப்பட்ட செம்பில் நீர் முகர்ந்து கொடுத்து வா என்றாள். அப்போது யாரும் காணாமல் தலைவியின் கையை தலைவன் பற்ற வீரென்று கூச்சலிட தலைவியின் தாய் ஓடி வர தலைவன் விக்கினான் என்று சமாளித்து தலைவனும் தலைவியும் கண்களால் சைகை மொழியில் பேசிக் கொண்டனர் இந்த நிகழ்வு தலைவன், தலைவி களவு நிலைப்பாடை உணர்த்துகிறது.

## முடிவுரை

பண்டையத் தமிழர்களால் வகைப்படுத்தப்பட்ட ஐந்து திணைகளில் குறிஞ்சித் திணை மற்ற திணைகளில் இருந்து வேறுபட்டது. ஏனெனில் நிலத்தைப் பண்படுத்தி வேளாண்மை செய்தல், வேட்டையாடிய பொருட்களைத் தங்களின் இனக்குழுவிற்கு பங்கிடுதல், தெய்வ வழிபாடு, களவு, கற்பு வாழ்க்கை, கலாச்சாரத்தைப் பேணிக்காத்தல் என்று மக்களின் வாழ்வில் அனைத்துமே பண்பாடு சார்ந்து பின்பற்றி வந்தனர். பழந்தமிழர்கள் சிறந்த நிலையில் பண்பாட்டு விழுமியங்களை கையாண்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

## References


தமிழ் வளர்ச்சிக் கழகம், (1961) கலைக்களஞ்சியம் தொகுதி-8, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

பாலசுப்பிரமணியன், கு.வெ (உ.ஆ)., சங்க இலக்கியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை,

மகேசுவரன், சி., (2023) பண்பாட்டு ஆய்வியல், பாரதி புத்தகாலயம், சென்னை

சக்தி ஜோதி, சங்க இலக்கியம் (உடல், மொழி, மனம்)., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License